# வல்லெழுத்துக்கள் மிகும் இடங்கள்

## அ, இ, உ சுட்டெழுத்துக்களின் பின்

- அ + காலம் = அக்காலம்
- இ + சமயம் = இச்சமயம்
- உ + பக்கம் = உப்பக்கம் ('உ' எனும் சுட்டெழுத்து வழக்கில் இல்லை)

## எ என்னும் வினா எழுத்தின் பின்

- எ + பொருள் = எப்பொருள்

## அந்த, இந்த, எந்த என்னும் அண்மை, சேய்மைச் சுட்டுகள் மற்றும் வினாச் சுட்டுகளின் பின்

- அந்த + காலம் = அந்தக் காலம்
- இந்த + சிறுவன் = இந்தச் சிறுவன்
- எந்த + பையன் = எந்தப் பையன்

## அப்படி, எப்படி, இப்படி என்னும் சொற்களின் பின்

- அப்படி + கேள் = அப்படிக் கேள்
- இப்படி + சொல் = இப்படிச் சொல்
- எப்படி + பார்ப்பது = எப்படிப் பார்ப்பது

## இரண்டாம் வேற்றுமை உருபுக்குப்பின் (ஐ)

- அவனைக் கண்டேன்
- செய்யுளைச் சொன்னேன்
- அவளைத் தேடினேன்

## நான்காம் வேற்றுமை உருபுக்குப்பின் (கு)

- அவனுக்குக் கொடுத்தேன்
- அவளுக்குச் சொன்னேன்

## என, ஆக என்ற சொற்களுக்குப்பின்

- எனக் கூறினான்
- அவனாகச் சொன்னான்